7th August 1963]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஸார், வேகன்ஸி வரும் போது தகுதி வாய்ந்த டாக்டர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். பத்திரிகையில் வந்தது பற்றி அரசாங்கத்திற்கு ஒன்றும் வரவில்லை.

கனம் சபாநாயகர்: பத்திரிகையில் வருவதைப்பற்றி ஒன்றும் சொல்ல முடியாது.

Panchayat Board meetings (Poolankurichi)

* 30 Q.—SRI S. MADHAVAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have received any complaint from the members of the Panchayat Board of Poolankurichi village, Thirupathur taluk, Ramanathapuram district, that they were not given notice of the meetings of the Panchayat Board; and

(b) if so, the action taken by the Government to safeguard the rights of Members?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No.

(b) Does not arise.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) இல்லை.

— (இ) வினா எழாது.

திரு. செ. மாதவன்: தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர்களைக் கூட்டத்திற்கு அழைக்காமல் கூட்டத்தை நடத்தினால் அதற்கு என்ன வழி வகைகள் செய்திருக்கிறார்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அப்படி பாதிக்கப்பட்டவர்கள் அரசாங்கத்திற்குப் புகார் செய்யலாம். அல்லது வழக்கு மன்றங்களுக்குச் செல்லலாம்.

திரு. செ. மாதவன்: வழக்கு மன்றங்களுக்குப் போவதில், தாங்கள் உறுப்பினர்களா இல்லையா என்பதற்குப் போவதற்குத் தான் பஞ்சாயத்துச் சட்டத்தில் இடம் இருக்கிறது. கூட்டத்திற்கு அழைக்காமல் கூட்டம் நடத்தினால் அதைத் தடுக்க பஞ்சாயத்துச் சட்டத்தில் இடமில்லையே என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மேல் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கலாம் என்று சொன்னேன். எதற்கும் நீதி மன்றங்களுக்குப் போக இடம் இருக்கிறது.

Recruitment of Executive Officers for Panchayats

* 31 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government propose to select candidates for the posts of Executive Officers of Panchayats; and

(b) if so, the mode of recruitment and other details thereof?

[7th August 1963

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) There is no proposal at present for recruiting candidates for appointment of Executive Officers of Town Panchayats.

(b) Does not arise.

(அ) தற்சமயம் நகர் பஞ்சாயத்துக்கள் நிர்வாக அதிகாரிகள் பதவிக்காக தேர்வு நடத்த உத்தேசமில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

* 32 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any selection of Executive Officers for Panchayats was made in 1962-63;

(b) if so, the number selected and the method of recruitment adopted; and

(c) the number of scheduled and backward classes among them?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes.

(b) Fifty-five suitable persons were selected from the category of clerks who had put in about five years service under panchayats and who possessed the qualifications prescribed for the post of Executive Officer.

(c) The only available candidates belonging to Scheduled Castes has been selected. Out of the remaining 54 persons selected, 24 belonged to Backward Class.

(அ) ஆம்.

(இ) நிர்ணயிக்கப்பட்டவாறு தகுதி பெற்றவர்களிலிருந்தும், பஞ்சாயத்துக்களில் சுமார் ஐந்து வருஷம் சேவை செய்த குமாஸ்தாக்களிலிருந்துமாக 55 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(உ) தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடமிருந்து வந்த ஒரே நபர் தேர்ந்தெடுக்கப்பட்டார். எஞ்சிய 54 பேர்களில் 24 பேர் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

* 33 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state the reasons for recruiting the Gramasevaks for the posts of Executive Officers of Panchayats when persons of vast experience and service in Panchayat administration are available and are serving as Executive Officers of Selection Grade and First Grade Panchayats?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: In view of the policy of the Government to make the posts of Executive Officers of Panchayats and Gramasevaks interchangeable, Gramasevaks are being appointed temporarily as Executive Officers of Panchayats. According to the rule relating to the post of Executive Officers of Panchayats it is not necessary that recruitment to all the posts of Executive Officers of Panchayats should be made only from employees of Panchayats.